# பழைய ஏற்பாடு

## பாடம் 8 இஸ்மவேலும் ஈசாக்கும் (ஆதி 13:16-18)

முந்தைய பாடத்தில் நாம் ஆபிராம் ஐசுவரியானாக மட்டுமல்ல,தேவனிடமிருந்து பெரிய வாக்குதத்தங்களையும் பெற்றிருந்தான் என்று கற்றுக்கொண்டோம். ஆபிராம் எகிப்து தேசத்தை விட்டுவிட்டு அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தை வந்து சேர்ந்தான். அந்த பிரயாணம் மிகவும் கடினமானதொன்றாய் இருந்தது. அநேக இடங்களில் ஆபிராம் பலிபீடங்களை கட்டி தேவனை ஆராதித்தான். அவனுக்கு குழந்தையை தவிர, ஒரு மனிதனுக்கு தேவையான அனைத்தும் இருந்தது. எப்பொழுது தேவன் அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார்? ஆபிராம் தேவன் சொன்ன எல்லா வாக்குதத்தங்களையும் விசுவாசித்தான். அது தேவனை மிகவும் பிரியப்படுத்தியது. எனவே அவர் அவனுக்கு வானத்தின் நட்சத்திரங்களைப் போல அநேக தலைமுறைகளை தருவேன் என்று திரும்பவும் வாக்கு கொடுத்தார். மேலும் ஆபிராம் தன்னுடைய பார்வையில் அவனுடைய விசுவாசத்தினால் நீதிமானாக காணப்பட்டான் என்று தேவனே கூறினாலும் அவனுக்கு ஒரு குமாரன் இல்லாதிருந்தது.

ஆபிராமும் அவன் சகோதரன் மகன் லோத்தும் சேர்ந்து கானானை நோக்கி பிரயாணம் செய்தனர். ஆனால் அவர்களுடைய மந்தைகள் மிகவும் அதிகமாக பெருகி கொண்டே வந்தது. அநேக இடங்களில் அந்த திரளாய் காணப்பட்ட ஆடுகளுக்கு தேவையான தண்ணீரும், புல்லும் கிடைக்காததால் மந்தை மேய்ப்பர்களுக்குள் சண்டை வந்தது. முடிவில் ஆபிராமும் லோத்தும் தனித்தனியாக வெவ்வேறு வழிகளில் செல்ல தீர்மானித்தனர். லோத்து யோர்தான் நதிக்கு கிழக்கே நீர்வளமுள்ள சமவெளியை தெரிந்து கொண்டான். அதே வேளையில் ஆபிராம் மலைதேசமான கானானில் தங்கினான். லோத்து தன் கூடாரங்களை துன்மார்க்கமும், துன்மார்க்கரும் மிகுந்த பட்டணமான சோதோமுக்கு அருகில் போட்டான். ஆனால் அவனது சித்தப்பா ஆபிராமோ எபிரோன் என்ற பட்டணத்திற்கு சென்று அங்கு வேறு ஒரு பலிபீடத்தை தேவனுக்கென்று கட்டினான்.

10 வருபங்களுக்கு பின்பு, சாராய் தேவன் வாக்குத்தத்தம் சொன்னபடி தனக்கு ஒரு குழந்தை இன்னும் கிடைக்கவில்லையே என வருத்தமடைந்தாள். அந்த காலத்து மக்களுக்குள்ளே ஒரு பழக்கம் காணப்பட்டது. என்னவென்றால்,ஒரு பெண் கர்ப்பவதியாகவில்லையென்றால் அவள் தன் வேலைக்கார பெண்ணை தன் புருஷனுக்கு மறுமனையாட்டியாக கொடுக்கலாம் என்று இருந்தது. அப்படி பிறக்கும் அந்த வேலைக்கார பெண்ணின் குழந்தை எஜமாட்டியின் குழந்தையாக கருதப்படும். இப்படியே சாராய்க்கு குழந்தை இல்லாததால் அவள் தன் வேலைக்கார பெண்ணான ஆகாரை மறுமனையாட்டியாக கொடுத்து தங்கள் குடும்பத்தை கட்ட முடிவு செய்தாள். ஆனால் ஆகார் தான் கர்ப்பம் தரித்தவுடன் சாராயை அற்பமாக எண்ணத்தொடங்கினாள். அது சாராய்க்கு கோபத்தை கொடுத்தது. அதினால் அவள் ஆகாரை கடினமாக நடத்தினாள். முடிவாக ஆகாரால் தாக்குப்பிடிக்க முடியாமல் போகவே அவள் ஓடிப் போய் விட்டாள்.

அவள் மிகவும் இளைப்படைந்தவளாய் காணப்பட்டதால் இளைப்பாறுவதற்காக ஒரு நீரூற்றின் அருகே ஒரு இடத்தை கண்டு பிடித்தாள். அப்போது திடீரென்று கர்த்தருடைய தூதனானவர் தோன்றி அவளிடம் “ஆகாரே நீ எங்கே போய்கொண்டிருக்கிறாய்?” என்று கேட்டார். அதற்கு அவள் “நான் என்னுடைய எஜமாட்டியாகிய சாராயை விட்டு ஓடி கொண்டிருக்கிறேன்” என்று பதில் கூறினாள். அதற்கு தேவதூதன் “நீ திரும்பி போய் சாராயிடம் அடங்கி இரு, தேவன் உன்னுடைய அங்கலாய்ப்பை கேட்டார். உனக்கு ஒரு குமாரன் பிறப்பான். அவனுக்கு இஸ்மவேல் என்று பேரிடுவாயாக. அவன் தன் சகோதரர் எல்லாருக்கும் விரோதமாக குடியிருப்பான். ஆனால் நான் உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன். அது பெருகி எண்ணிமுடியாததாயிருக்கும்” என்றார் (ஆதி 16:10)

ஆகாருக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அதினால் அவள், “என்னை காண்கிறவரை நானும் இங்கு கண்டேன்” என்று சொல்லி அந்த இடத்திற்கு ‘என்னைக் காண்கிற தேவனின் நீரூற்று’ என்று பெயரிட்டாள். தேவன் ஒரு தூதனாக வந்து அவளிடம் பேசினார். எனவே ஆகார் சாராயிடம் திரும்ப சென்று ஆபிரகாமுக்கு ஒரு குமாரனை பெற்றாள். ஆபிராம் அந்த குழந்தைக்கு ‘தேவன் கேட்கிறவர்’ என்ற அர்த்தம் கொள்ளும் இஸ்மவேல் என்று பெயரிட்டான். இஸ்மவேல் பிறக்கும் போது ஆபிராமுக்கு வயது 86.

13 வருடங்களுக்கு பின்பு, ஆபிராமுக்கு 99 வயதானபோது, தேவன் அவனுக்கு தரிசனமாகி 'நான் சர்வ வல்லமையுள்ள தேவன் "எல் ஸடாய்" (El Saddai) நான் உன்னுடன் பண்ணின உடன்படிக்கையை உறுதிப்படுத்தி உன்னை பெரிய ஜாதியாக மாற்றுவேன். உன் சந்ததியாரில் சிலர் ராஜாக்களாக இருப்பார்கள். ஆகவே நான் உன் பெயரை ஆபிரகாம் என்று மாற்றுகிறேன். ஆபிரகாம் என்றால் 'அநேக ஜாதிகளுக்கு தகப்பன்' நான் உன்னோடே இருப்பேன். உனக்கும் உன் பின்வரும் உன் சந்ததிக்கும் இந்த தேசத்தை தருவேன். அந்த உடன்படிக்கைக்கு அடையாளமாக நீ உன்னிடம் உள்ள ஒவ்வொரு ஆணையும் விருத்தசேதனம் செய்ய வேணடும்" என்றார். எனவே ஆபிரகாமும் அவனுடைய 13 வயது மகன் இஸ்மவேலும் வீட்டில் உள்ள எல்லா ஆண்களும் ஒரே நாளிலே விருத்தசேதனம் பண்ணப்பட்டார்கள். (ஆதி 17:26)

மேலும் தேவன் ஆபிரகாமிடம், "இப்பொழுதிருந்து உன்னுடைய மனைவியின் பெயர் சாராய் என்று அழைக்கப்படாமல் 'சாராள்' என்று அழைக்கப்படும். நான் அவளை ஆசீர்வதிப்பேன். அவள் உனக்கு ஒரு குமாரனை பெறுவாள். அவள் அநேக ஜாதிகளுக்கு தாயாவாள்" என்றார். இவ்வாறு அவர் கூறியவுடனே, ஆபிரகாம் நகைத்து "இது எப்படி ஆகும். நூறு வயது மனிதனுக்கும் 90 வயது பெண்ணுக்கும் பிள்ளை பிறக்குமோ? இஸ்மவேல் உமது ஆசீர்வாதத்தினால் வாழ்வானாக!'' என்றான்.

தேவன் பிரதியுத்திரமாக "சாராள் உனக்கு ஒரு குமாரனை பெறுவாள். அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிடுவாயாக. நான் என் உடன்படிக்கையை அவனோடும், அவனுக்கு பின்வரும் அவனுடைய சந்ததியோடும் ஏற்படுத்துவேன். நான் அவர்கள் தேவனாயிருப்பேன். இந்த முழு உலகமும் அவர்கள் மூலமாய் ஆசீர்வதிக்கப்படும். நான் இஸ்மவேலையும் ஆசீர்வதிப்பேன். அவனை பெரிய ஜாதியாக மாற்றுவேன். அவனிடத்திலிருந்து 12 ராஜாக்கள் தோன்றுவார்கள்" என்றார். தேவன் ஆபிரகாமுடன் பேசி முடித்த பின்பு அவனை விட்டு சென்றார்.

சில காலத்திற்கு பின்பு, ஆபிரகாம் தன் கூடாரவாசலில் உட்கார்ந்திருந்த போது அவன் தன் கண்களை ஏறிட்டு பார்த்த போது, மூன்று புருஷர்கள் நிற்பதைக் கண்டான். அவன் வேகமாக அவர்கள் அண்டை ஓடி சென்று அவர்களை தரைமட்டும் குனிந்து "ஆண்டவன்மார்களே, தயவு செய்து நீங்கள் வந்து இந்த மரத்தடியில் உட்கார்ந்து இளைப்பாறுங்கள். நான் உங்களுக்கு கால்களை கழுவ தண்ணீரும் சாப்பிட ஆகாரமும் தருவேன். நீங்கள் சற்று இளைப்பாறி புத்துணர்ச்சி பெற்று உங்கள் பயணத்தை தொடரலாம்" என்றான்.

அவர்கள் பிரதியுத்தரமாக, "நல்லது, நீ சொன்னபடியே செய்" என்றார்கள். உடனே ஆபிரகாம் கூடாரத்துக்கு வேகமாக ஓடிச் சென்று சாராளிடம் சில அப்பங்களை செய்ய சொன்னான். பின்பு வயலுக்குச் சென்று ஒரு நல்ல இளங்காளையை தெரிந்தெடுத்து, வேலைக்காரனிடம் கொடுத்து சமைக்க சொன்னான். உணவை சீக்கிரமாய் தயாரித்து விருந்தினர்களுக்கு அந்த சாப்பாட்டை பரிமாறினான். பிறகு அவன் பின்னால் நின்று அவர்கள் சாப்பிடுவதை கவனித்து கொண்டிருந்தான். அவன் அவ்வாறு கவனிக்கையில் அவர்கள் சாதாரண மனிதர்கள் அல்ல, அவர்களில் ஒருவர் மனித உருவில் வந்த தேவனாகிய கர்த்தர், மற்ற இருவரும் மனித உருவில் இருந்த தேவதூதர்கள் என்று உணர்ந்தான். ஆதியாகமத்தை எழுதின ஆசிரியர் அங்கு வந்த நபரை தேவனுடைய தூதனானவர், கர்த்தருடைய தூதனானவர் அல்லது தேவனானவர் என்று அடிக்கடி குறிப்பிடுகிறார்.

அவர்கள் சாப்பிட்டு முடித்தபின்பு தேவன் ஆபிரகாமிடம், "உன்னுடைய மனைவியாகிய சாராள் எங்கே?" என்றார். "அவள் கூடாரத்தில் இருக்கிறாள்" என்று ஆபிரகாம் பதிலளித்தான்.

பின்பு அவர் "நான் உன்னிடம் ஒருவருட காலத்திற்கு பின்பு வருவேன். அப்பொழுது சாராள் ஒரு குமாரனை பெற்றெடுத்திருப்பாள்'' என்றார். சாராள் இதை கூடாரத்தின் உள்ளே இருந்து கேட்டு கொண்டிருந்தாள். அவள் 89 வயதுடையவளான தான் ஒரு குமாரனை பெற போகிறதாய் கூறியதை எண்ணி தனக்குள் நகைத்தாள். மேலும், இது கூடாத காரியம் தனக்கு மிகவும் வயதாகி இருப்பதால் ஒரு பிள்ளையை பெற்றெடுப்பது இயலாத காரியம் என நினைத்தாள்.

அப்பொழுது தேவன் ஆபிரகாமிடம், "ஏன் சாராள் நகைத்தாள்? தேவனால் கூடாத காரியம் ஒன்று உண்டோ? நான் திரும்ப வருவேன்? சாராள் ஒரு பிள்ளையை பெற்றெடுப்பாள்" என்றார்.

சாராள் இதை கேட்ட பொழுது, அவள் மிகவும் பயந்ததினால் “நான் நகைக்கவில்லை” என்றாள். ஆனால், அவர் “ஆமாம் நீ நகைத்தாய்” என்று சொன்னார்.

ஒரு வருடத்திற்குள் சாராளுக்கு பிள்ளை உண்டானது. தேவனுடைய வார்த்தை அவர் சொன்னபடி உண்மையாய் நிறைவேறிற்று.

இந்த பாடம் மிகவும் முக்கியமானது. இதன் மூலம் தேவன் காலத்தையும், சம்பவங்களையும் ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையிலும் ஆளுகை செய்து நடத்துகிறார் என்பது விளங்குகிறது. தேவன் நம் ஒவ்வொரு வரை குறித்து ஒரு திட்டமும் அதை நிறைவேற்ற ஒரு கால அட்டவணையையும் வைத்துள்ளார். சில காரியங்கள் முடியாதவைகளாக தோன்றலாம். ஆனால் தேவனுக்கு எதுவும் கடினமானது அல்ல.

இந்த பாடத்தின் முக்கியமான உண்மை என்னவென்றால், தேவன் வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற உண்மையுள்ளவர்.

இந்த பாடத்தை திரும்பி பார்த்து பின்வரும் கேள்விகளுக்கு பதில் அளியுங்கள்.

1. சாராய் எந்த பிரச்சினையை தேவனுக்காக செய்து முடித்தாள்?

**a)**(6 நொடிகள் கழித்து) **நீங்கள்,சாராள் சொன்னாள்,எனக்கு இன்னும் குழந்தை இல்லை’[நீங்கள் சரியான பதில் கூறியுள்ளீர்கள்.**

2. தேவனுடைய வாக்குத்தத்தம் எந்த மகன் மூலம் ஆபிரகாமுக்கு நிறைவேற்றப்பட்டது?

a)(6 நொடிகள் கழித்து) தேவன் “நான் என் வாக்குதத்தை ஈசாக்கினிடத்திலும் அவன் சந்ததியினிடத்திலும் நிறைவேற்றி நான் அவர்கள் தேவனாயிருப்பேன்” என கூறினார் என்று சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3.சாராள் நகைத்த போது தேவன் அவளிடம் என்ன கேள்வி கேட்டார்?

a)(6 நொடிகள் கழித்து) “தேவனுக்கு கடினமானது உண்டோ?” என கேட்டார் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடத்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

கடைசியாக, இந்த பாடத்தை ஒரு போதும் கேட்டிராத ஒரு நண்பரிடம் கூறுங்கள். அந்த நண்பரிடம் இன்றும் அற்புதங்கள் நடப்பது சாத்தியம் என்று நம்புகிறீர்களா? என்று கேட்கவும். சாத்தியமில்லை என்று அவர் சொல்வாரானால் அவரிடம் தேவன் மாறி விட்டாரா? என்று கேட்கவும். பின்னர் தன் வயதான பெற்றோருக்கு ஈசாக்கு பிறந்த வேதாகம சம்பவத்தை அவருக்கு விளக்கி கூறுங்கள். இப்பொழுது அவரிடம் திரும்பவும் அற்புதங்கள் நடக்கும் என்று விசுவாசிக்கிறீர்களா? என்று கேளுங்கள்.

பாடம் முடிந்தது